20th July 1962]

கல்லூரிக்குச் சொல்லாமல் பட்டப் படிப்பு பெறுதல்

* 447 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் கொண்டுவர உத்தேசித்திருக்கும் கல்லூரிக்குச் செல்லாமலே பட்டப் படிப்பு பெறும் திட்டத்தை நமது மாநிலத்திலும் அமுலுக்கு கொண்டுவர உத்தேசமுண்டா ?

(இ) இல்லையானல், அதற்கான காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) This is a matter for the University to consider.

டிராபிக் போலிஸார் (விசேஷ அலவன்சு)

* 488 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (திரு. ஆ. தங்கவேலு—சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிராபிக் போலிசார் (Traffic Police) கடும் வெயிலில் பணியாற்றுகிறார்களே, அதற்கு ஏதாவது தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ?

(இ) இல்லையென்றால், அப்படிக் கொடுப்பதற்கு திட்டம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Does not arise.

மதிய உணவுத் திட்டம்

* 449 கேள்வி.—திரு ராம. அரங்கண்ணல் (திரு மு. பொ. வடிவேல் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் செயல்படுவதைப்பற்றி அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மதிய உணவுத் திட்ட மதிப்பீடு கமிட்டியின் அறிக்கையை அங்கத்தினர்களின் தகவலுக்காக சபையில் வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, as soon as the examination of the report is completed.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த மதிய உணவுத் திட்டத்தை ஆராய்ச்சி செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் முடிவில் முக்கியமாகக் காணப்படும் சிபார்சுகள் என்ன ? அவற்றின்மேல் அரசாங்கம் எடுத்துள்ள முடிவுகள் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித்தான் என் விடையில் குறிப்பிட்டிருக்கிறேன். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது முடிந்தவுடன் அந்த ரிப்போர்ட்டில்